**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.359/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.1.சுமதி** |
| **Husband's Name** | : **கோபாலகிருஷ்ணன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.02.2020

மு.வி:

நான் சென்னை வேளாச்சேரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன். 1வது எதிரி என்னுடைய தாய்மாமா. 2வது எதிரி 1வது எதிரியின் 2வது மனைவி. 3வது எதிரி 1வது எதிரியின் நண்பர். 14.06.2012 ஆம் தேதி என்னிடம் வியாபாரம் செய்வதற்காக பணம் வேண்டும் என்று 1வது எதிரி கேட்டார். என்னிடம் இருந்த சுமார் 30 பவுன் நகைகளை சென்னை கூட்டுறவு வங்கியில் அடகு வைத்து ரூபாய் 1 லட்சத்தை ஜீலை மாதம் எழுமலையில் வைத்து கொடுத்தேன். மீதம் ரூபாய் 90 ஆயிரம் வங்கியின் மூலமாக 28.07.2012 ஆம் தேதி கொடுத்தேன். மேற்படி 90 ஆயிரத்தை முறையே 40 ஆயிரம், 25 ஆயிரம் 1வது எதிரி வங்கி கணக்கிலும் மற்றும் ரூபாய் 25 ஆயிரத்தை அவருடைய நண்பர் சின்னப்பாண்டி என்பவருடைய பெயரில் உள்ள வங்கி கணக்கில் பணம் செலுத்தினேன். ஆகஸ்ட் மாதத்தில் 2வது எதிரியின் கரூர் வைசியா வங்கி கணக்கில் ரூபாய் 2,40,000/- 4 அல்லது 5 தவணைகளில் செலுத்தினேன். மொத்தம் ரூபாய் 4,30,000/- செலுத்தினேன். ஒரு வருடத்தில் பணம் தந்துவிடுகிறேன் என சொன்னார். நான் போன் செய்தபோது போனை எடுக்கவில்லை. நான் பணம் கொடுத்து ஒரு வருடம் கழித்து 14.06.2013 ஆம் தேதி நேரடியாக எழுமலைக்கு வந்து 1வது எதிரியிடம் பணத்தை கேட்டதற்கு தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார். எங்கள் ஊருக்குள் வந்து பணம் கேட்டால் கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார். என் அம்மா மட்டும் தான் எழுமலையில் இருந்தார். பிறகு எழுமலை காவல் நிலையத்தில் நடவடிக்கை

எடுக்க கோரி புகார்கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். என் அம்மா பெயர் நாகராஜாத்தி. என் அம்மா உடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 நபர்கள். சம்பவ சமயத்தில் என் கணவர் சென்னை நோக்கியா நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். சம்பவ சமயத்தில் சென்னையில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம். சென்னையில் 2016 ஆம் ஆண்டு சொந்த வீடு கட்டினேன். புகாரை நான் கைப்பட எழுதினேன். நான் முதல் விசாரணையில் சொன்ன தேதிகளில் பணம் பரிமாற்றங்கள் நடைபெற்றதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒரு வருட காலத்தில் எதிரி தந்துவிடுவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நகையை அடகு வைத்த ரசீதுகளை காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பணம் பரிமாற்ற கணக்குகளை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. 2வது எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் வங்கி பரிமாற்றங்களை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அம்மா பாகப்பரிவினை கேட்டு 1வது எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1வது எதிரியிடம் பணம் கொடுத்ததற்கு நான் ஆவணங்கள் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. 2வது எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு நான் ஆவணங்கள் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ஒரு வருடத்தில் தந்துவிடுவதாக சொன்னதற்கு ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. எழுமலையில் வைத்து 1 லட்சம் முதலில் கொடுத்தேன் தேதி ஞாபகமில்லை. அவ்வாறு நான் கொடுக்கும்போது நானும் என் கணவர் மட்டும் இருந்தோம். ஊர் மக்கள் யாருமில்லை. வெள்ளிக்கிழமை அன்று கொடுத்தேன். ஒரு லட்சம் கொடுத்து ஒரு மாதம் கழித்து 90 ஆயிரம் கொடுத்தேன். மேற்படி பணத்தை சென்னையிலிருந்து பாரத ஸ்டேட் வங்கி மூலமாக அனுப்பினேன் என்றால் சரிதான். 90 ஆயிரம் பணம் கொடுத்த பிறகு 2 அல்லது 2 ½ மாதங்களுக்குள் 2வது எதிரிக்கு ரூபாய் 2,40,000/- கரூர் வைசியா வங்கி மூலம் அனுப்பினேன். அவ்வாறு பணம் கடைசியாக கொடுத்த பிறகு ஒரு வருடம் கழித்து தான் எழுமலைக்கு வந்து பணம் கேட்க வந்த இடத்தில் இந்த வழக்கின் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் நகைகளை அடமானம் வைத்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு எல்.ஐ.சியில் ரூபாய் 49 லட்சம் கடன் பெற்றேன். அவ்வாறு 2016 ஆம் ஆண்டு கடன் பெற்றேன். 1வது எதிரியின் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்று எனக்கு தெரியாது. நான் புகார் கொடுக்க சென்றபோது காவல் நிலையத்திற்கு எனது கணவரும் வந்தார் ஆனால் அவர் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தபோது மாலை 5 மணிக்கு மேல் இருக்கும். புகார் கொடுத்த அன்றே சென்னை சென்றுவிட்டோம். அவ்வாறு சென்னை சென்றபிறகு சென்னை வந்தோ அல்லது என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தோ போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. பணத்தை

கேட்க சென்றபோது எதிரியின் வீட்டு வாசலில் வைத்து கேட்டோம். சம்பவம் சுமார் 15 நிமிடங்கள் நடந்திருக்கும். சம்பவ இடத்தில் சத்தம் கேட்டு நிறைய நபர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் மதியம் 2 மணி அளவில் நடைபெற்றது. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். ஒரு வருட காலத்தில் பணத்தை கேட்டு பஞ்சாயத்து வைத்தேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் சொன்ன தேதிகளில் நகையை அடகு வைத்தோ வங்கி மூலமாக பல தேதிகளில் பணங்களை 1வது எதிரிக்கோ 2வது எதிரிக்கோ நான் முதல் விசாரணையில் சொல்லியபடி பணங்கள் பரிமாற்றம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் நானும் என் கணவரும் எதிரியின் வீட்டு வாசலில் நின்று பணத்தை கேட்டபோது எந்த எதிரியும் எங்களை அவதூராக பேசவில்லை மிரட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் பணம் நான் கொடுத்திருந்தால் புரோ நோட்டு மூலமாகவோ அல்லது வேறு எந்தவிதமான ஆவணங்கள் மூலமாகவோ எதிரியிடமிருந்து பெறப்பட்டு கொடுத்திருப்பேன் என்றும் அப்படி கொடுக்காததால் தான் எந்த ஆவணமும் எதிரியிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பணம் கேட்டு சிவில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என் தாயார் தற்போது இறந்துவிட்டார். எனது தாயாருக்கும் 1வது எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிரி மீது காலம் தாழ்த்தி ஒரு பொய்யான புகாரை கொடுத்து தனது செல்வாக்கை பயன்படுத்தி வழக்கை பதிவுசெய்ய வைத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.359/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.கோபாலகிருஷ்ணன்** |
| **Father's Name** | : **மணி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.02.2020

மு.வி:

நான் சென்னை வேளாச்சேரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் சீனாவில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. 1வது எதிரி என்னுடைய மனைவியின் தாய்மாமா. 2வது எதிரி 1வது எதிரியின் 2வது மனைவி. 3வது எதிரி 1வது எதிரியின் நண்பர். 2013 ஆம் வருடம் என் மனைவி ஏற்கனவே 1வது எதிரிக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக பணத்தை திருப்பி கேட்பதற்கு எழுமலைக்கு நான் என் மனைவியான அ.சா.1யை அழைத்துக்கொண்டு வந்திருந்தேன். மொத்தம் என் மனைவி 4,30,000/- கொடுத்திருந்தார். ரூபாய் 1 லட்சம் 1வது எதிரிக்கு ரொக்கமாகவும் 90 ஆயிரம் 1வது எதிரி வங்கி கணக்கிற்கும் ரூபாய் 2,40,000/- ல் ரூபாய் 1,80,000/- கரூர் வைசியா வங்கி மூலம் 2வது எதிரிக்கு கொடுத்துள்ளார். மீதம் ரூபாய் 60 ஆயிரம் ரொக்கமாக கொடுக்கப்பட்டதா அல்லது வங்கி மூலம் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு ஞாபகமில்லை. 14.06.2013 ஆம் தேதி நான் மேற்சொன்னவாறு என் மனைவியை அழைத்து கொண்டு பணத்தை கேட்க சென்றபோது ஒரு மணி நேரம் பேசியதற்கு பின்னர் மதியம் சுமார் 1.30 மணி அளவில் பணம் தரமுடியாது என்று சொன்னார். 1வது எதிரி அப்போது என் மனைவியை தேவடியா என்று அசிங்கமான வார்த்தையால் பேசினார். கொன்றுவிடுவேன் என சொல்லுவதைப்போல் தொலைத்துவிடுவேன் என சொன்னார். பிறகு மாலை காவல் நிலையத்திற்கு செல்லலாம் என முடிவெடுத்து எழுமலை காவல் நிலையம் சென்று என் மனைவி புகார் கொடுத்தார். சம்பவ சமயத்தில் 1வது எதிரி, நானும் அ.சா.1 மட்டும்

இருந்தோம். வேறு யாரும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

எனக்கு பணம் கொடுத்த தேதி மற்றும் மாதங்கள் குறிப்பிட்டு தெரியுமா என்றால் 20.07.2012 ஆம் தேதி என் மனைவி ரூபாய் 1 லட்சம் எழுமலையில் வைத்து ரொக்கமாக கொடுத்தார். அவ்வாறு பணம் கொடுத்தபோது 1வது எதிரி மட்டும் இருந்தார். வேறு யாருமிருந்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு சொந்த ஊர் பழனி. 1வது எதிரி பணம் கேட்டது என் மனைவி சொல்லி தான் எனக்கு தெரியும். பணம் கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு என் மனைவி பணம் கேட்டதை பற்றி என்னிடம் சொன்னார். நான் அந்த சமயத்தில் சென்னை நோக்கியா நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். 1வது எதிரி தொலைபேசி மூலமாக பணம் கேட்டதாக என் மனைவி என்னிடம் சொன்னார். 20.07.2013 ஆம் தேதி நானும் என் மனைவியும் எழுமலை வந்து ரூபாய் 1 லட்சம் கொடுத்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். என்னுடைய வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 50 ஆயிரம் 1வது எதிரி வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். என்னுடைய வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 1,80,000/- 3 தேதிகளில் 2வது எதிரியின் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். மேற்படி வங்கி கணக்கு என் பெயரிலும் அ.சா.1ன் பெயரிலும் உள்ள கூட்டு வங்கி கணக்காகும். அவ்வாறு கூட்டு வங்கி கணக்கிலிருந்து தான் பணம் செலுத்தப்பட்டது என போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு அதற்கு உண்டான ஆவணங்களை கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். நாங்கள் சென்னை ஆதம்பாக்கத்தில் முதலில் குடியிருந்தோம். நான் அந்த சமயத்தில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேனா என்றால் இல்லை. வீடு கட்டுவதற்காக 2008 ஆம் ஆண்டு எல்.ஐ.சி மூலமாக என் பெயரில் கடன் பெற்றேன் என்றால் சரிதான். 23 லட்சம் ரூபாய் கடன் பெற்றேன். பாகப்பிரிவினை கோரி என் மாமியார் 1வது எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி கேள்விப்பட்டுள்ளேன். பணம் கொடுத்ததற்கு வட்டி பேசப்பட்டதா என்று எனக்கு தெரியாது. பணம் கொடுத்ததற்கு 1வது எதிரியிடமோ 2வது எதிரியிடமோ ஆவணங்கள் பெற்றுக்கொண்டோமா என்றால் இல்லை. பணம் திருப்பி கொடுப்பதற்கு காலகெடு நிர்ணயித்தோமா என்றால் ஒரு வருடத்தில் திருப்பி கொடுத்துவிடுவார்கள் என என் மனைவி சொன்னார். கடைசியாக அக்டோபர் 2012 ஆண்டு பணம் கொடுத்தோம். சம்பவம் 2013 ஆண்டு ஜீன் மாதம் நடைபெற்றது. காலை 9 மணியில் எதிரியின் வீட்டுக்குள் சென்று கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக 2 அல்லது 3 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். இந்த சமயத்தில் அருகில் இருந்த நபர்கள் வந்தார்களா என்றால் இல்லை. பிரச்சினை சுமுகமாக முடியாத காரணத்தினால் வீட்டை விட்டு வெளியே வந்து வாசலில் நின்றிருந்தோம். அப்போது தான் எதிரி சத்தம் போட்டார். சத்தம் கேட்டு ஆட்கள் கூடினார்கள். காவல்நிலையத்தில் என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. புகார் கொடுத்த தினத்தில் பண பரிமாற்ற ஆவணங்களை கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். புகார் கொடுத்த பிறகு அன்றையதினமே சென்னை சென்றுவிட்டோம்.

அதன்பிறகு போலீசார் எங்களை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் என் மனைவியோடு வந்து ரொக்கமாக சொன்ன தேதியில் ரூபாய் 1 லட்சத்தை 1வது எதிரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று பல தேதிகளில் 1வது எதிரிக்கோ 2வது எதிரிக்கோ நானும் அ.சா.1ம் கணக்கு வைத்துள்ள வங்கியிலிருந்து பணம் பரிமாற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் என் மனைவி என்பதால் என் மனைவியின் தாயாருக்கும் 1வது எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக மனவருத்தம் இருந்து வருவதால் என் மனைவிக்கு ஆதரவாக அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.